முருகப்பெருமான் துணை

**மகான் மார்கண்டேயர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.04.2024,** புதன்கிழமை

1. அன்னதான ஞான வள்ளலே
அறம் போற்றுகின்ற அண்ணலே
அண்ணலே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல் திங்கள்
குறைவிலா மூவேழு திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 21 ம் நாள், 03.04.2024, புதன்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க மார்கண்டேயர் யானும்
3. யானும் உலகோர் நலம்பெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் அரங்கன்
ஞானவழிகளை உலகம் ஏற்றிட
ஞான உலகமாவது உறுதி
4. உறுதி தந்து ஞானிகள் படை
உயர் ஞானி அரங்கனோடு
பிரணவக் குடிலில் துணையாகயிருக்க
பேதமற கலியுக மக்கள் தானும்
5. தானுமே அரங்க ஞானி மேல்
தக்கபடி நம்பகம் மிகுதி வைத்து
ஞானம் வேண்டி வருதலுற
நல்நிலைகள் கூடும் வண்ணம்
6. வண்ணமுடன் அரங்கன் கரம்பட
வருகின்ற தீட்சை அனைத்தும்
எண்ணம் மனம் தூய்மைபட
எல்லா சித்திகளும் தந்தருளும்
7. அருளவே அரங்கன் மேலான
அன்புநெறி தயவு நெறி பெருக
வரமாக தரும ஞானபலம் கூடி
வருங்காலம் அறியும் பலம்

8. பலம் கூடி பாருலகை மாற்றும்
பரிபக்குவ ஆற்றல் கூடி
வலம் வருவர் வையகம் தன்னில்
வள்ளல் அரங்கன் சக்திகளாக

9. ஆகவே நிலைகள் கூடி
ஆன்மீக ஞான உலகை
மகான்கள் துணைபட இனிதே
மாற்றமாகச் செய்து முடிப்பர்

10. செய்திட அரங்கன் அவதாரம்
சித்தி முக்தி மக்களுக்குத் தருவது
அய்யன் முருகப் பெருமான் வெளிப்பட
ஆட்சிமாற்றம் ஞானத்தலைமையாக

11. ஆகவே உலகம் கண்டுமே
அற்புதம் ஞான உலகாக
வகைபட கண்டுத்தேறும்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—